# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 04 திங்கட்கிழமை 17.06.2024 கதிர் 276







# முல்லைத்தீவில் தமிழர்களின் பூர்வீகக் காணிகள் அபகரிக்கப்பட்டு குடியேற்றப்பட்ட பெரும்பான்மையினத்தவருக்கு வழங்கப்பட்டுள்ளன!

## முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் குற்றச்சாட்டு




**முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான பூர்வீகக் காணிகள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றம் சுமத்தியுள்ளார்.**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறு என்ற இடம் வெலிஓயாவாக மாற்றம் செய்யப்பட்டு தமிழ் மக்களுடைய பூர்வீக காணிகளை அபகரித்து 4,238 பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவில் ஊடகங்களுக்கு அவர் தெரிவித்துள்ளார்.**

**அத்துடன், தமிழ் மக்களுக்குச் சொந்தமாக இருந்த பூர்வீகமான நீர்ப்பாசனக் குளங்கள், அதனோடு இணைந்த காணிகள் அனைத்தும் அபகரிக்கப்பட்டு பல குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

2➤

# கடனுதவிகளை எதிர்வரும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த ஜனாதிபதி ரணில் திட்டமிடுவதாக சந்தேகமுள்ளது!

## மொட்டு கட்சியும் நலனடையப் பார்க்கின்றது என்கிறார் முஜிபுர் ரஹ்மான் எம்.பி.



அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளின் படியே நடந்து கொள்வதென்றால் அரசாங்கத்திற்கு பொருளாதார ஆலோசகர்கள் தேவையில்லை எனவும் அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதில் அர்த்தமுமில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில், "ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மேலும் 8750 மில்லியன் ரூபாவை கூடுதல் நிதியாக செலுத்துவதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் எந்தவொரு நிதியத்திலிருந்தோ அல்லது அரசாங்கம் பெறுகின்ற எந்தவொரு கடனையோ தமது தேவைகளுக்கு பயன்படுத்த முடியும் என இதில் குறிப்பிடப்படுகின்றது.

அதன்படி, மக்களின் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்தோ, ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்தோ, சர்வதேச நாணய நிதியம் வழங்கும் கடனிலிருந்தோ மேற்படி நிதியை பெறக்கூடிய வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் அண்மித்துள்ள வேளையில் இவ்வாறான செயல்முறையையிட்டு சந்தேகம் எழுந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின்போது, ஜனாதிபதி விக்ரமசிங்கவும், மொட்டு அரசாங்கமும் இந்த நிதியைப் பயன்படுத்த முயற்சிக்கக் கூடும் என்ற சந்தேகம் எழுதுகின்றது. இது குறித்து ஆராயுமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டுக் கொள்கின்றேன். இதன் மூலம் ஒரு சட்டவிரோதமான செயலையே ஜனாதிபதி செய்ய முயல்கின்றார்.

ஜனாதிபதி தனது பதவி காலத்தை நீடிக்க சட்டங்களை இயற்ற முயல்கின்றார். இதற்காக அரசியலமைப்பு சபைக்கும் அழுத்தங்களை

2➤

# கொவிட் தொற்று சாதாரண நோயாக மாறிவிட்டது! முன்னரைப் போல் தற்போது சோதனைகள் இல்லை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு



நிமோனியாவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளிகள் கொவிட் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனரா? இல்லையா? என்பது தொடர்பில் கொவிட் பரிசோதனைகள் நடத்தப்படுகின்ற போதிலும், கொவிட் நோயாளர்களை அடையாளம்காண்பதற்கான முன்னரைப் போன்ற பரிசோதனைகள் தற்போது நடத்தப்படுவதில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

2➤

# தெற்கு அரசியலில் வெகுவிரைவில் ஏட்டிக்குப் போட்டியாகக் கட்சி தாவல்

தெற்கு அரசியலில் வெகுவிரைவில் ஏட்டிக்குப் போட்டியாகக் கட்சி தாவல்கள் சூடுபிடிக்கும் என்று சிங்கள வார இதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன என்றும், கட்சி தாவும் காலப் பகுதி பற்றி ஆராயப்பட்டு வருகின்றது என்றும் தெரியவருகின்றது. இதன்படி ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே தாவல்கள் பெருமளவில் இடம்பெறக் கூடும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அரசுடன் இணையவுள்ளனர்.

அதேபோல் ஆளுங்கட்சி பக்கம் உள்ள 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிக்கவுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

அத்துடன், சர்வஜன அதிகாரம் பக்கமும் சில எம்.பிக்கள் செல்லவுள்ளனர். மேலும் சிலர் தேசிய மக்கள் சக்தியுடன் இணைவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

எனவே, கட்சிதாவல்கள்களைகட்டும்என்றும், சுமார்40 வரையான எம்.பிக்கள் தமது அரசியல் நிலைப்பாட்டை மாற்றத் திட்டமிட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (05)

# தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின்போது சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படும்!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க



"தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படும்" என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியபோது, தேர்தலை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயங்குகிறது. அதனாலேயே தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முயல்கிறது. நாட்டில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றால் தற்போதைய ஜனாதிபதி உட்பட அவரது ஆதரவாளர்களும் வீடு செல்ல வேண்டி ஏற்படும்.

தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் ஆணை கிடையாது. நாட்டை வீழ்ச்சிப்பாதையில் இருந்து கட்டியெழுப்புவதற்கான எந்தவித வேலைத்திட்டங்களும் அரசாங்கத்திடம் இல்லை.

நாட்டில் விரைவில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுவதுடன் தேர்தலில்

2➤

### கொவிட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டில் இன்னமும் கொவிட் நோயாளிகள் காணப்படுகின்ற போதிலும், கிருமிநாசினிகளை பயன்படுத்தி கைகளைக் கழுவுதல் மற்றும் ஒரு மீட்டர் இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட பிற பரிந்துரைகளைக் கொண்ட சுகாதார வழிகாட்டுதல்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போதும் கூட சமூகத்தில் கொவிட் நோயாளிகள் உள்ள நிலையில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவது மிகவும் அவசியம் எனவும், கொவிட் தொற்று தற்போது உலகில் இயல்பு நிலைக்கு வந்துள்ளதாகவும், இந்நோய் காய்ச்சல் மற்றும் சளி போன்ற பொதுவான நோயாக மாறியுள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ரென-52)

### கடனுதவிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்கின்றார். தேர்தல் நடக்கவிருக்கும் நேரத்தில், ஜனாதிபதி சட்டத்திற்கு மாறாக 8750 மில்லியன் நிதியைப் பெறுவது அவரது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கே என்பது தெளிவாக புரிகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் அனைத்து நிபந்தனைகளுக்கும் அரசாங்கம் அடிபணிந்துள்ளது. இவ்வாறு நாட்டு மக்களை இன்னல்களுக்கு உள்ளாக்கும் விதத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியமே அரசாங்கத்தின் பொருளாதார ஆலோசகராக செயற்படுகின்றது. எனவே, அரசங்கத்திற்கு வேறு நிதி ஆலோசகர்கள் தேவையில்லை. அவர்களுக்கென சம்பளம் வழங்குவதில் எந்தவொரு பயனும் இல்லை", என்றும் குறிப்பிட்டார். - (ரென-51)

### முல்லைத்தீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆமையன்குளம், முந்திரிகைகுளம், மறிச்சுக்கட்டி குளம் ஆகிய குளங்களையும் அதனோடு இணைந்த நிலப்பரப்புகளையும் அபகரித்தே பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கி, தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களையும், குளங்களையும் ஏக்கத்தோடு பார்த்து கொண்டிருக்கும் நிலமையை ஆட்சியாளர்கள் கொக்குத்தொடுவாய் , கொக்குளாய், கருநாட்டுக்கேணி மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 47,455 மொத்த குடும்பங்களில் 140,931 மக்கள் தொகையாக காணப்படுகின்றது. இதில் தமிழர்களுடைய பூர்வீக இடங்களில் குடியமர்த்தப்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 12,545 பேரும், முஸ்லிம் மக்களாக 1,675 குடும்பங்களை சேர்ந்த 6,382 பேரும் தமிழ் மக்களாக 41,210 குடும்பங்களை சேர்ந்த 121,799 பேருமாகக் காணப்படுகிறார்கள்.

குறிப்பிட்டு கூறக்கூடிய விடயம் என்னவெனில், தமிழ் மக்களுக்குச் சொந்தமாக இருந்த பூர்வீக நீர்ப்பாசனக் குளங்கள் அதனோடு சேர்ந்த காணிகள் அனைத்தும் அபகரிக்கப்பட்டு 4,557 குடும்பங்களில் பல குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கத்தின் அறிவிப்பின்படி 28,676 இளைஞர், யுவதிகள் ஒரு ஏக்கர் காணி வீதம் தருமாறு விண்ணப்பித்திருந்த நிலையில், இன்றுவரைக்கும் அவர்களுக்கான காணிகள் வழங்கப்படவில்லை எனவும் துரைராசா ரவிகரன் மேலும் தெரிவித்தார். (04)

### தேசிய மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் எமது ஆட்சியில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப் பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படும். நாட்டிற்கு பொருத்தமான வகையிலேயே ஒப்பந்தங்கள் அமைய வேண்டும், என்று அவர் தெரிவித்துள்ளார். (04)

# ஓட்டோ விபத்தில் இருவர் படுகாயம்

நானுஓயா, ரதல்ல குறுக்கு வீதியில் ஓட்டோ ஒன்று இன்று காலை குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நானுஓயாவில் இருந்து ஹட்டன் நோக்கிப் பயணம் மேற்கொண்டு மிகவும் சரிவான ரதல்ல குறுக்கு வீதியில் அபாயகரமான வளைவில் ஓட்டோ சாரதிக்கு ஓட்டோவின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி விபத்தில் ஓட்டோவில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மலையகப் புகையிரதப் பயணங்களின்போது ஆபத்தான நிலையில் செல்லும் சுற்றுலாவிகள்!

## அறிவுறுத்தல் விடுக்குமாறு கோரிக்கை

மலையகப் புகையிரதப் பாதையில் புகையிரதங்களில் பயணிக்கும் வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலா பயணிகள் சிலர் புகையிரதப் பலகைகளில் தொங்கியவாறு பயணித்து, பாதுகாப்பற்ற ஆபத்தான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகப் பலரும் குறிப்பிடுகின்றனர்.

ஓஹியாவுக்கும் பட்டிப்பொலவுக்கும் இடையில் புகையிரதப் பலகையில் தொங்கிக் கொண்டிருந்த உக்ரேனியப் பெண் அண்மையில் (15) தவறித் தரையில் விழுந்து படுகாயமடைந்தமையை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதே போல பலர் சுரங்கப் பகுதியிலும் விழுந்து மரணித்து உள்ளார்கள் எனவும், நாவலப்பிட்டியில் இருந்து பதுளை புகையிரத நிலையம் வரையான மலையக புகையிரதத்தில் பயணம் செய்யும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பலர் புகையிரதப் பலகைகளில் தொங்கிச் செல்வதாகவும், சில வெளிநாட்டவர்கள் புகையிரதப் பலகைகளில் தொங்கியவாறு செல்பி எடுப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வாறான செயல்களில் ஈடுபடும் சுற்றுலாப் பயணிகள் சில சமயங்களில் ரயிலில் இருந்து தவறி விழுந்து விபத்துகள் ஏற்படுவதாகவும் ரயில் பயணிகள் கூறுகின்றனர்.

மலையகப் புகையிரதப் பாதையில் பாதுகாப்பற்ற முறையில் புகையிரதங்களில் பயணிக்கும் உள்நாட்டு, வெளிநாட்டவர்களுக்கு அறிவுறுத்தல்களை மேற்கொள்ளும் நடவடிக்கையை ரயில்வே அதிகாரிகள் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென புகையிரதப் பயணிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

# தலையில் தேங்காய் விழுந்து 11 மாதப் பெண் குழந்தை பலி

## கண்டியில் சோகம்

கண்டி, கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல்தோட்டை நாராங்ஹின்ன தோட்டத்தில், 11 மாதப் பெண் குழந்தையின் தலையில் தேங்காய் வீழ்ந்ததில் அக்குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

லோகேஸ்வரன் கியாஸ்சினி என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. அந்தக் குழந்தையைத் தந்தை தூக்கி செல்லும்போதே இந்தச் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குழந்தையின் தலைப் பகுதியில் காயங்கள் ஏற்பட்ட நிலையில் தெல்தோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பின் அங்கு இருந்து உடனடியாக பேராதெனிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. குழந்தை அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

மேலதிக விசாரணைகளைப் கலஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணம்

*கிண்ணியா, பைசல் நகர், ஜித்தா நகரைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று இரவு, சீனக்குடா வெள்ளைமணல் பகுதியில் வைத்து, இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் பலியானார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.*

*48 வயதான அப்துல் மஜீத் நசூறுள்ளா என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு பலியானவராவார்.*

*விபத்தில் பலியானவர், கிண்ணியாவிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்றவர் என்றும், விமானப்படை உத்தியோகத்தர் ஒருவர், கிண்ணியா நோக்கி வந்து கொண்டிருந்தவர் என்றும், இருவருடைய மோட்டார் சைக்கிள்களும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து ஏற்பட்டது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.*

*விமானப்படை உத்தியோகத்தர் பலத்த காயங்களுக்குள்ளாகி, திருகோணமலை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)*






செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# இறைவனுக்காக தியாகங்கள் செய்து இறையன்பைப் பெற்றுக்கொள்வோம்! ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் கலாநிதி சிராஸ் மீராசாஹிப்



எமது நாட்டில் இனங்களுக்கிடையில் இருக்கின்ற தப்பபிப்பிராயங்கள் களையப்பட்டு, புரிந்துணர்வும் சகவாழ்வும் நிலையான அமைதியும் உருவாக இன்றைய ஈகைத்திருநாளில் பிரார்த்திப்போம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வரும், மெற்றோபொலிடன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தனது பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில்,

இந்தத் தியாகத் திருநாளில் எம்மனைவர் மீதும் இறையருள் பொழிய, இறையன்பு கிடைக்க பிரார்த்திக்கிறேன்.

நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களினதும், அவர்களது மனைவி மற்றும் குழந்தையினதும் தியாகங்களை நினைவுபடுத்தும் முகமாக அல்லாஹ் இத்திருநாளை எமக்கு அருளியுள்ளான். அக்குடும்பத்தினரின் தியாகங்கள் முழு மனித சமூகத்திற்கும் சிறந்த முன்மாதிரியாகும். தனிமனிதர்களின், குடும்பங்களின் மற்றும் சமூகங்களின் தியாகங்கள் மூலமே தேசம் வெற்றிகரமான எதிர்காலத்தை அடைய முடியும். இஸ்லாம் தியாகங்களின் ஊடாகவே வாழ்வில் வெற்றி அடைய முடியுமென்பதை போதிக்கின்றது.

எனவே நாங்கள் எமது வாழ்க்கையிலும் தியாகங்கள் பலவற்றை செய்ய வேண்டியுள்ளது. எமது தியாகங்கள் இறைவனுக்காக செய்யப்படுபவையாக இருக்கும்போதுதான் நாம் இறைவனின் நற்கூலியையும் இறையன்பையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இன்றைய எமது நாட்டு பொருளாதார சூழ்நிலையில் முஸ்லிம்களும், சகோதர இன மக்களும் பல பொருளாதார சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கின்றனர், அடிப்படை தேவைகளை கூட நிறைவேற்ற முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. நாம் எம்மால் முடிந்ததை வழங்கி அவர்களது வாழ்விலும் ஒளியேற்றுவோம்.

அனைத்து சகோதர நெஞ்சங்களுக்கும் ஹஜ்பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்!, என தெரிவித்துள்ளார்.

## சுயமதிப்பீட்டுப் பயிற்சி மற்றும் மேம்பாடுகள் திருமலை நகரசபை நூலகத்தில் கருத்தாக்கம்



(ஹஸ்பர் ஏ.எச்)

அறிவு ஒளி மையத்தில் பயன் பெறும் மாணவர்கள் தங்களைத் தொடர்ந்து மேம்படுத்துவதற்குத் தேவையான கருவிகள் மற்றும் மனநிலையுடன் சித்தப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, சுய-மதிப்பீட்டுப் பயிற்சி மற்றும் மேம்பாட்டை மையமாகக் கொண்ட ஒரு கருத்தாக்கம் ஒன்று நேற்று ஞாயிற்றுக் கிழமை திருக்கோணமலை நகரசபை நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட திருக்கோணமலை செயலாளர் திரு. இராஜசேகர் நகர சபையினது சேவை மற்றும் அதனோடு இணைந்து இந்த மக்களது பங்கு இளைய சமுதாயத்தின் தேவை என்பனவற்றை எடுத்துரைத்தார்.

வளவாளர் கணேஷ் இந்த கருத்தாக்க நிகழ்வினை வழிநடத்தி சிறப்பான முறையில் மாணவர்களது விருத்தியை மேல்நோக்கும் விதமாக செயற்படுத்தினார். இந்த நிகழ்வின் இருதியில் அறிவு ஒளி மையப் பணிப்பாளர் உதயகுமார் அஜித்குமார், மாணவர்களது தேவைகள் சிலவற்றை அடுத்து வரும் மாணவர் மன்றக் கூட்டத்தில் பூர்த்தி செய்து தருவதாக உறுதியளித்தார்.

இந்த நிகழ்வை அறிவு ஒளி மையத்தின் நிர்வாகச் செயலாளர் டிலக்ஷிகா புகழ்வேந்தன் ஒழுங்கமைத்திருந்தார்.




## பாரதி வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(வி.ரி.சகாதேவராஜா)

திருகோணமலை மூதூர் பாரதி மகா வித்தியாலய மாணவர்களில் வசதி குறைந்த 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் இணைந்தகரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு பாடசாலையின் அதிபர் பு.ஜெயக்காந்தன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

"ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்" எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பானது பல கஷ்டப் பிரதேசப் பாடசாலை மாணவர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாக கற்றல் உபகரணங்களை வழங்கிவருகிறது.

பாரதி மகா வித்தியாலயமானது 139 ஆவது பாடசாலையாகத் தெரிவாகி உதவிகளைப் பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி, இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான, சி.காந்தன், லோ.கஜரூபன், எஸ்.சுரேஸ், மா.ஜெகனாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர் .

## பாலமுனையில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை



(எம்.எம்.றம்ஸீன்)

புனித ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் திடல் தொழுகையானது பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது

பாலமுனை ஸஹ்வா ஆண்கள் அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்ஃ ஏ.ஆர்.றமீன் (மதனி) அவர்களால் தொழுகை நடத்தப்பட்டு குத்பா பிரசங்கமும் நிகழ்த்தப்பட்டது.

# துறைமுக அதிகார சபையில் போலி மனிதவள முகவர் ஊடாக ஆட்சேர்ப்பு நடைபெறுவதாக தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு!

## பின்னணியில் அமைச்சரரொருவரின் மனைவி? தொழிற்சங்கங்கள் சந்தேகம் வெளியிட்டன



துறைமுக அதிகார சபையில் போலி மனிதவள முகவர் நிறுவனமொன்று நிறுவப்பட்டு துறைமுகத்திற்கு பணியாளர்களுக்கான ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதாக துறைமுக தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

இச்சம்பவத்தின் பின்னணியில் உள்ள பலம் வாய்ந்த அரசியல் கரம் குறித்து சந்தேகம் இருப்பதாக மேற்படி தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் 'ஆன்' என்ற பெயரைக் கொண்ட பெண்ணொருவரைப் பற்றி பேச்சடிபடுவதாகவும் இந்த 'ஆன்' என்பவர் அமைச்சரொருவரின் மனைவியா அல்லது வேறு ஒருவரா என்பதை இன்னும் உறுதிப்படுத்த முடியவில்லை எனவும் தொழிற்சங்க பேச்சாளரொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் உட்பட இலங்கை துறைமுக அதிகார சபையை தனியார் மயமாக்கும் ரணில் விக்கிரமசிங்ஹ அரசாங்கத்தின் சந்தேகத்திற்குரிய செயற்பாடுகள் தொடர்பில் தெரிவிப்பதற்காக மகாநாயக்க தேரர்களை சந்திக்கவுள்ளதாகவும் துறைமுக தொழிற்சங்கங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

மேற்படி விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நேரமொன்றை ஒதுக்கித்தரு மாறு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் நிமல் சிறிபால சில்வாவிடம் வேண்டுக்கோள் விடுத்து ஒரு மாதம் கடந்து விட்ட போதிலும் அதற்கான சந்தர்ப்பத்தை அமைச்சர் இதுவரை வழங்கவில்லை எனவும் தொழிற்சங்கத்தின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த போலி மனிதவள முகவர் நிலையத்தின் ஊடாக துறைமுக அதிகாரசபையில் பணிபுரிய வருபவர்கள் உரிய பயிற்சி பெறாத தொழிலாளர்கள் எனவும் இவர்கள் பல கோடி ரூபா பெறுமதியான இயந்திரங்களை இயக்குவதால் மேற்படி இயந்திரங்கள் சேதமடைய வாய்ப்புள்ளதாகவும், இவ்வாறான ஊழல்கள் மற்றும் முறைகேடுகளால் சுமார் 8,000 துறைமுக ஊழியர்களின் தொழில்கள் ஆபத்தான நிலையை எதிர்நோக்கியுள்ளதாகவும், துறைமுக அதிகாரசபையில் பணிபுரிய தகுதியற்றவர்கள் நியமிக்கப்படுவதால் துறைமுக அதிகார சபைக்கும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ரென-47)

## வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துதல் திட்டம் சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பிப்பு!



வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பான திட்ட வடிவமொன்றை இலங்கை அதிகாரிகள் சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது இந்த ஆண்டின் (2024) மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளில் பல வகை வாகனங்களின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், நடப்பு 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பொதுப் போக்குவரத்து சேவைகளுக்கான வாகன இறக்குமதிகளுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்தல், நான்காவது காலாண்டில் பிறவகை வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தல் ஆகிய அரசாங்கத்தின் முன்மொழிவுகள் சர்வதேச நாணய நிதியத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள நிதி ராஜாங்க அமைச்சர், வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் நாணய நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல், நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு அதிகரிப்பு மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இந்த யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (ரென-48)

## ரஷ்யாவில் போரில் ஈடுபட்ட இலங்கையர்களை மீட்பதற்கு குழுவொன்று ரஷ்யா செல்லவுள்ளது



ரஷ்யாவில் போரில் ஈடுபட்ட இலங்கையர்களை மீட்கும் பணிகள் குறித்து ஆலோசிக்க வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தலைமையிலான சிறப்பு குழுவொன்று ரஷ்யாவிற்கு செல்லவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, காமினி வலேபொட மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோரும் இந்தக் குழுவில் பங்கேற்க உள்ளனர்.

இந்தக் குழு ரஷ்யாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் மற்றும் பாதுகாப்புத்துறை தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர், இப்பேச்சுவார்தைகள் எதிர்வரும் 26 மற்றும் 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரென-49)

## இலங்கையில் 80 வீதமான தனியார் பேருந்துகள் மண்ணெண்ணெய் மூலமே இயங்குகின்றனவாம்!



இலங்கையில் 80 வீதமான தனியார் பேருந்துகள் மண்ணெண்ணெய் மூலமே இயங்குவதாகவும், இது பயணிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தத்தக்கது எனவும் ஐக்கிய ஒத்துழைப்பு முன்னணியின் தலைவர் லக்கி கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அனைத்து தனியார் பேருந்துகளையும் சோதனை செய்ய வேண்டும் எனவும், பெரும்பாலான தனியார் பேருந்துகள் மண்ணெண்ணெய்யில் இயங்குவது குறித்த பேருந்து உரிமையாளர்களுக்கும் தெரியும் எனவும் குறிப்பிட்ட அவர், பயணிகளின் உயிருக்கு இது அச்சுறுத்தலாக இருப்பதால் இது குறித்து போக்குவரத்து அதிகாரிகள் கண்டறிய வேண்டும், இல்லையேல் காவல்துறை தலையிட வேண்டும், மண்ணெண்ணெய்யில் இயங்கும் பேருந்துகளுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமல்படுத்த வேண்டும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

(ரென-50)



## சூப்பர் 8 சுற்றுக்குள் நுழைந்தது பங்களாதேஷ் கிரிக்கெட் அணி

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் சூப்பர் 8 சுற்றுக்கு பங்களாதேஷ் அணி தகுதி பெற்றுக்கொண்டது.

நேபாள அணிக்கு எதிரான போட்டியில் வெற்றியீட்டியதன் ஊடாக பங்களாதேஷ் அணி சூப்பர் 8 வாய்ப்பை உறுதி செய்து கொண்டது. மேற்கிந்திய தீவுகள், சென் வின்சென்டில் இன்று நடைபெற்ற இந்த போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நேபாள அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பங்களாதேஷ் அணி 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. பங்களாதேஷ் அணி சார்பில் எந்தவொரு வீரர்களும் குறிப்பிடத்தக்க ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை

ஆயினும், 106 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நேபாளம் அணி 19.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 85 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தது. பங்களாதேஷ் அணி சார்பில் பந்துவீச்சில் சகிப் அல் ஹசன் 4 விக்கட்டுக்களையும், முஸ்டபிசுர் ரஹ்மான் 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் பங்களாதேஷ் அணி அணி 21 ஓட்டங்களினால் வெற்றியீட்டியதோடு, ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் சூப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெற்றுக்கொண்டது.

'சி' குழுவில் இடம் பெற்றுள்ள பங்களாதேஷ் அணி பங்கு பற்றிய 4 போட்டிகளில் 3 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது.

பங்களாதேஷ் அணியுடன் இந்தியா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, ஆப்கானிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் சூப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

(04)

# கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தில் மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு



சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையமும் சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இணைந்து, குறித்த கல்வி நிலையத்தில் கல்வி கற்று பல்கலைக்கழக பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கும், க.பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்ற மாணவர்களுக்கும் சுழிபுரம் கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தில் ஓய்வு நிலை அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.

இதன் பொழுது கல்வி நிலைய மாணவர்களால் கலை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன.

தொடர்ந்து அண்மையில் வெளியான க.பொ.த உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் 3 ஏ சித்திகளை பெற்ற ஞானேஸ்வரன் கிந்துஷா மற்றும் கல்வி நிலையத்தில் பழைய மாணவர்களாக அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தில் கணக்கியலில் சிறப்பு வணிக நிர்வாகமாணி பட்டத்தினை பெற்ற சித்திரசேனன் றாகவன் மற்றும் கலாசார சுற்றுலாத் துறையில் சிறப்பு பட்டத்தினை பெற்ற இராசரத்தினம் தர்ஷன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலாளர் கவிதா உதயகுமார், கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பரா.நந்தகுமார், சங்கானை ஸ்தான அ.மி.த.க பாடசாலை முன்னாள் அதிபர் ம.முகுந்தன், கல்வி நிலைய புலம்பெயர் ஒருங்கிணைப்பாளர் த. தேவகுமார், புலம்பெயர் தேச நலன்விரும்பி பு.கமலதாஸ், சுழிபுரம் மேற்கு சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (01)

## சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயம் நடாத்துகின்ற முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் நினைவு தினப் போட்டி

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூரின் நினைவு தினத்தை முன்னிட்டு, கமு.கமு.எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்தினால் நினைவு தினக் கட்டுரைப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

“முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம்.மன்சூர் அவர்களின் கறை படியாச் சேவைகள்” எனும் தலைப்பில் கட்டுரை அமைய வேண்டும்.

கட்டுரைப் போட்டிக்கான விதிமுறைகளாக, போட்டிக்கான ஆக்கங்கள் தமிழ் மொழி மூலம் மாத்திரம் எழுதப்படல் வேண்டும். ஏ4 தாள்களின் ஒருபக்கத்தில் மாத்திரம், நான்கு தாள்களிற்கு குறையாமல் ஆக்கம் இருத்தல் வேண்டும். ஆக்கங்கள் அவரவர் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.10 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் உட்பட ஏனைய அனைவரும் கலந்துகொள்ள முடியும்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். கட்டுரை ஆக்கங்கள் அனைத்தும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். ஆக்கத்தின் இறுதிப் பக்கத்தின் பின்புறம் கட்டுரையாளரின் பெயர், முகவரி மற்றும் வட்ஸ்அப் இலக்கம் என்பனவற்றை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி, கட்டுரைப் போட்டி இணைப்பாளர், கமு. கமு. எம். எஸ். காரியப்பர் வித்தியாலயம், பொலிவேரியன் கிராமம், சாய்ந்தமருது. அத்துடன் அஞ்சல் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “ஏ.ஆர்.எம். மன்சூர் நினைவு தினப் போட்டி “ எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படும் நாள் 2024.07.12 ஆம் திகதியாகும்.

முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.






## நியாமுல் ஜன்னாஹ் ஜும்ஆ பள்ளி வாசல் ஏற்பாட்டில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை



(எம்.ஏ.ஏ.அக்தார்)

பாலமுனை நியாமுல் ஜன்னாஹ் ஜு/ம்மா பள்ளிவாசல் ஏற்பாடு செய்த பெருநாள் தொழுகை பாலமுனை அல் ஹிக்மா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

அஸ்ஷேக் ஐ.எல்.எம். ஹாஷிம் அவர்களால் தொழுகை மற்றும் குத்பா பிரசங்கம் நிகழ்த்தப்பட்டது.

# இந்திய இழுவை மடி படகுகளின் அத்துமீறல் செயற்பாடு நிறுத்த கோரி யாழ்இந்திய துணைத் தூதரகம் முற்றுகை!

## யாழ்ப்பாண கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் அறிவிப்பு



இந்திய இழுவை மடி படகுகளின் அத்துமீறல் செயற்பாட்டை தடுத்து நிறுத்த கோரி நாளையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூ தரகத்தை முற்றுகையிடப்போவதாக அறிவித்துள்ள யாழ்ப்பாண கடற்றொழிலாளர் பிரதிநிதிகள், எமக்கு விரைவில் தீர்வு கிடைக்காவிடில் நாடாளுமன்றத்தையும் முற்றுகையிடுவோம் என்றனர்.

யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பிலான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் சிறீ கந்தவேல் புனித பிரகாஸ் கருத்து தெரிவிக்கையில்,

இந்திய இழுவை மடி படகுகளின் அத்துமீறல் செயற்பாடு எமது கடற்பகுதிகளில் அரங்கேறிவருகிறது. இதனால் எமது கடற்றொழிலாளர்கள் பெருமளவு பாதிபாபை எதிர்கொள்கின்றனர்.

நாளை காலை 10 மணிக்கு இந்திய துணைத் தூதரகத்திற்கு முன்பாக போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம்.

ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர், துறைசார்ந்த திணைக்களங்கள் விரைந்து செயற்பட்டு இந்திய இழுவை மடி படகுகளை கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் நாடாளுமன்றத்தை முற்றுகையிட எமது அமைப்புக்கள் திட்டமிட்டுள்ளன.

யாழ் மாவட்ட கடற்றொழில் கிராமிய அமைப்புகளின் சம்மேளன தலைவர் செல்லத்துரை நற்குணம் கருத்து தெரிவிக்கையில், இந்திய இழுவைமடி கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் எமது மக்கள் வீதிக்கு வந்து பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டி வரும். சிறுவர் தொடங்கி பெரியவர் இதன் மூலம் பாதிப்புக்களை எதிர்கொள்வர்.

இலங்கை அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மனித நேயத்துடன் இந்திய மற்றும் தமிழக அரசாங்கம் செயற்படவேண்டும். இந்தியாவின் மிலேச்சத்தனமாகவே இதனை பார்க்கிறோம்.

இந்திய துணைத் தூதரகத்தின் முன்பாக நாளை தினம் நடைபெறவுள்ள போராட்டத்திற்கு அனைத்து கடற்றொழிலாளர்களையும் பங்கேற்குமாறு வேண்டுகிறோம் - என்றார்.

(01)

# யாழ். முஸ்லிம்கள் ஜின்னா மைதானத்தில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றினர்

யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களின் ஈதுல் அல்ஹா ஹஜ்ஜ/ப் பெருநாள் தொழுகை வழமை போன்று இம்முறையும் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி ஜின்னா மைதானத்தில் இன்று காலை 6.30 மணியளவில் மௌலவி எம்.ஏ.பைசர் (மதனி) தலைமையில் இடம்பெற்றது.

இன்றைய பெருநாள் தொழுகையானது மர்யம் மஸ்ஜித்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்தது.

மௌலவிஎம்.ஏ.பைசர்(மதனி) பெருநாள் தொழுகையை நடத்தியிருந்ததுடன், ஹஜ்ஜ/ப் பெருநாளின் முக்கியத்தும், நபி இப்ராஹீம் அலை அவர்களின் வாழ்வின் தியாகங்கள், அவரின் வாழ்க்கையின் முக்கிய படிப்பினைகளை கருப்பொருளாகக் கொண்டு பெருநாள் விசேட உரையும் நிகழ்த்தியிருந்தார்.

பெருநாள் தொழுகைக்காக ஜின்னா மைதான திடலில் இன்று ஆண்கள், உலமாக்கள், பெண்கள், முதியவர்கள், இளைஞண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு சில பள்ளிவாசல்களிலும் பெருநாள் தொழுகை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(05)










## ஹஜ் பெருநாள் திடல் தொழுகை கிண்ணியாவில் இடம்பெற்றது


(ஹஸ்பர் ஏ.எச்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி வீசி மைதானத்தில் இன்று காலை ஹஜ் பெருநாள் திடல் தொழுகை இடம் பெற்றது.

பலரும் இந்தத் தொழுகையில் கலந்து கொண்டதுடன் குத்பா பிரசங்கமும் இடம் பெற்றது.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நடேஸ்வராக் கல்லூரிக்கு பழைய மாணவர்களால் கணினிகள் அன்பளிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கு லண்டன் பழைய மாணவர்களால் அவர்களது நம்பிக்கையுடன் நிதியத்தின் மூலம் பெறுமதியான ஆறு கணினிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.



## சாய்ந்தமருது மாளிகைக்காட்டில் அதிகாலையில் பெருநாள் தொழுகை

(நூருல் ஹுதா உமர்)

தியாகத்தை போதிக்கும் புனித ஹஜ்ஜுப் பெருநாளை நாட்டின் பொருளாதார சிக்கல் நிறைந்த சூழ்நிலையில் இம்முறை இலங்கை முஸ்லிங்கள் அமைதியான முறையில் நாடுதழுவிய ரீதியில் இன்று கொண்டாடி வருகிறார்கள்.

அதன் ஓர் அங்கமாக மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் ஜு/ம்மா பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.எல்.எம். மின்ஹாஜ் (உஸ்மானி) நிகழ்த்தினார்.

சாய்ந்தமருது அல் - அக்ஸா பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது கமு.கமு. லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்மாப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது அப்பிள் தோட்ட திடலில் இடம்பெற்றன. இங்கும் பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கமும் நிகழ்த்தப்பட்டன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.06.2024இல் வெளியிடப்பெற்றது.